**MARUDHAR KESARI JAIN COLLEG FOR WOMEN, VANIYAMBADI**

**PG & RESEARCH DEPARTMENT OF TAMIL**

**e-Notes (Study Material)**

**I MA TAMIL**

| | |
|---|---|
| **CORE COURSE : பக்திஇலக்கியம்** | **CODE :** 24PTAC21 |
| **Unit 2 – சுந்தரர், மாணிக்கவாசகர்** | |

## Learning Objectives

தமிழின் பக்தி இலக்கிய வரலாற்றையும் வளத்தையும் அறிதல்.

சைவ இலக்கியங்கள் வழி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

வைணவ இலக்கியங்களின் வலி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

பிற்கால பக்தி இலக்கியப் போக்கினை உணரும் வகையில் அருணகிரிநாதர் தாயுமானவர் ராமலிங்க அடிகளார் ஆகியோரின் ஆளுமைகளை கண்டறிதல்.

இஸ்லாமின் கிருத்துவ பக்தி இலக்கிய போக்கை உலக சமயப் போக்கு நிலைப்பாடல் வழி கற்றல்.

## Course Outcomes

சைவ இலக்கியங்களில் இலக்கியக் கருத்துக்களையும் யாப்பின் சிற்பம் சங்கங்களையும் அறிதல் கொள்வர்.

## OUTCOMES

- சுந்தரர் ஏழாம் திருமுறை – திருமுறை திருமலை பாடி பித்தா பிறை சூடி பத்து பாடல்கள் எண் (239 – 248)

மாணிக்கவாசகர் – திருவாசகம் திருப்பெருத்துறையில் அருளிய சிவபுராணம் முழுவதும் தில்லையில் அருளிய திருச்சாழல் முழுவதும் 18 பாடல்கள் (255-274)

**பக்தி - விளக்கம்:**

‘ **பக்தி** ‘ என்ற வடசொல்லிற்கு ‘ **கலந்து நிற்றல்** ‘ என்பது பொருளாகும்.இறைவனோடு கலந்து நிற்றலையே தமிழ்ப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன எனக் குறிப்பிடுவார் ப.அருணாசலம்.தொடர்புடைய உறவினரிடம் காட்டும் விருப்பம் அன்பாகவும்,உறவு கடந்த நிலையில் எல்லோரிடமும் காட்டும் நெகிழ்வுணர்வை அருளாகவும்,நல்லறிவிற்கு வழிகாட்டும் ஆசிரியரிடம் காட்டும் அன்பு குருபக்தியாகவும் பேசப்படுகின்றன.

**பக்தி இலக்கியத் தோற்றம்:**

தமிழ்நாட்டில் சங்ககாலத்திலேயே பக்தியுணர்வு இருந்தமையால்தான் குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல் என்ற நான்கு நிலங்களுக்கும் முறையே சேயோன் (முருகன்),மாயோன் (திருமால்),இந்திரன்,வருணன் ஆகியோர் தெய்வங்களாகக் கூறப்பட்டனர்.பாலை நிலத்திற்குக் கொற்றவை தெய்வமாகக் கொள்ளப்பட்டது.கடவுள்கள் என்று சொல்லப்பட்டதும் அவர்கள் தொடர்பான வழிபாடும் அவர்களைப் போற்றிய நூல்களும் தோன்றின.

தமிழ்நாட்டில் பக்தி இலக்கியங்கள் பண்டுதொட்டே இருந்து வருகின்றன.எனினும் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலத்தில் தோன்றிய சமய இலக்கியங்களையே பக்தி இலக்கியங்கள் எனக் கூறுகின்றனர்.சைவ சமயத் தொடர்பாகத் தோன்றிய நாயன்மார்களும்,வைணவ சமயத் தொடர்பாகத் தோன்றிய ஆழ்வார்களும் பல்வேறு படிநிலைகளில் பக்தி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர்.

**சமயநெறி:**

மக்களின் மனத்தைப் பக்குவப்படுத்திச் சமைப்பதால் தெய்வநலத் தொடர்புடன் கூடியதைச் சமயம் என அழைத்தனர்.சமய உணர்வு என்பது சொல்லால் உணர்த்தப்படுவதன்று.ஒன்றிய அனுபவத்தால் உணரத்தக்கது.சமயநெறி உடற்சார்பு உடையதன்று.உண்மையில் உடற்சார்பு வாயிலாக உயிர்சார்பு வாயிலாக உணர்வுசார்பு உடையது என்பதை உணர்தல் வேண்டும்.எல்லாச் சமயக்களம் ஒரே பரம்பொருளைச் சுட்டிச் செல்கின்றன என்பதே சமய நல்லிணக்கத்திற்கு அழைத்துச் செல்லும் உயர்வழியாகும்.

## சைவம்

**பன்னிரு திருமுறைகள்:**

பக்தி இலக்கியச் சான்றோர்களின் பணிகளுள் தமிழ் இலக்கியப் பணி மிகப் பெரியது.புதுமையானது,மறுமலர்ச்சி எண்ணம் கொண்டது.இந்த எழுச்சி கி.பி 6-ம் நூற்றாண்டு முதல் 10-ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் பொங்கித் ததும்பியது. சைவம்,வைணவம் என்னும் இந்து சமயச் சான்றோர்கள் பலர் இந்த எழுச்சியை முன்னின்று நடத்தினார்கள்.இவர்கள் திருக்கோயில்களில் பணி செய்து, திருக்கோயில் வழிபாடு மீண்டும் தொடரத்

செய்தனர்.' **ஒன்றே குலம்** ' என்று பறைசாற்றி,ஒதுக்கப்பட்டிருந்த பாமர மனிதனையும் அரவணைத்துக் கொண்டு சமய வழிபாடுகளிலும் பண்பாட்டுப் பணிகளிலும் ஈடுபட்டனர்.இதனால் ஒதுக்கப்பட்டிருந்த கலைகள் உயிர்ப்பு பெற்றன.தமிழிசையுடன் கலந்த பக்திப்பாடல்களை இயற்றி,பண்களுடன் பாடி,மக்களையும் பாடச் செய்தனர்.திருக்கோயில்கள் கலைகளின் கூடாரம் ஆயின.

பக்திப் பாடல்கள் எண்ணற்றவை.எனினும் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்கள் பாடிய பன்னிரு திருமுறைகளும்,பன்னிரண்டு ஆழ்வார்களின் பாசுரங்கள் அடங்கிய திவ்வியப் பிரபந்தங்களுமே ' **பக்தி இலக்கியம்** ' என்னும் சிறப்புக்கு உரியவை ஆகின்றன.

சைவ சமயக் குரவர்களின் இறைநெறிக் கோட்பாட்டையும் அதன்வழித் தமிழகத்தில் அவர்கள் சைவ சமயத்தையும் பன்னிரு திருமுறைகள் வழி அறியலாம். சைவ அடியார்கள் ' **நாயன்மார்கள்** ' எனப்பட்டனர்.நாயன்மார்களின் எண்ணிக்கை அறுபத்து மூன்றாகும்.இவர்களுள் திருஞான சம்பந்தர்,திருநாவுக்கரசர்,சுந்தரர்,மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் சமயக்குரவர் நால்வர்களாக எண்ணப்படுகின்றனர்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் வேதியர்,வேளாளர்,சாலியர்,சான்றோர்,பஞ்சமர்,பரதவர் முதலான குலத்தவர்கள் இருந்தனர்.சைவ சமயப் பெரியார்கள் இயற்றியளித்த பக்திப் பா மாலைகளைத் தொகுக்கும் பணி கி.பி 10 - ம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்றது.சோழப் பேரரசன் இராசராசனின் வேண்டுகோளுக்கு இணங்க நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் முதல் மூவர் பாடிய பாசுரங்களைத்

தேவாரமாகத் தொகுத்தார்.இவை முதல் ஏழு திருமுறைகளாகும்.பின்னர் பிற இலக்கியங்களும் தொகுக்கப்பட்டுத் ‘ **திருமுறைகள் பதினொன்று** ‘ என்று கொள்ளப்பட்டது.சேக்கிழார் படைத்த பெரிய புராணத்துடன் திருமுறைகள் பன்னிரண்டாகக் கொள்ளப்பட்டது.

**சைவத்திருமுறைகள்:**

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு.முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும்.இவற்றை அருளியவர்கள் சம்பந்தர்,அப்பர்,சுந்தரர் ஆகிய மூவரும் ஆவர்.மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை.ஒன்பதாம் திருமுறை திருமாளிகைத்தேவர்,சேந்தனார் முதலான ஒன்பது அருளாளர்கள் பாடிய நூல்களின் தொகுப்பாக விளக்குவது.10 - ம் திருமுறை திருமூலரின் திருமந்திரம் ஆகும்.11 - ம் திருமுறை 12 அருளாளர் பாடிய நாற்பது நூல்களின் தொகுப்பாக உள்ளது.சேக்கிழார் அருளிய பெரியபுராணம் 12 - ம் திருமுறையாகும்.

**ஏழாம் திருமுறை:( சுந்தரர்)**

ஏழாம் திருமுறையைப் பாடியவர் சுந்தரர்.நம்பி ஆரூரர்,ஆளுடை நம்பி,தம்பிரான் தோழர் என்ற வேறு பெயர்களும் இவருக்குண்டு.இவர் பாடியனவாக வழங்கும் 100 பதிகங்கள் ( 1026 ) 7 - ம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.இளமையில் திருமணம் செய்ய முற்பட்டபோது இறைவனால் தடுத்து ஆளப்பெற்றார்.இறைவனின் அடியார்களின் வரலாற்றினைத் ‘ **திருத்தொண்டத்தொகை** ‘ என்ற நூலாகப் பாடியவர்.இந்நூல் சேக்கிழார் பெரிய புராணம் பாட அடிப்படையாக அமைந்தது.

சுந்தரர் இறைவனைத் தோழனாகப் பாவித்தவர்.ஆகவே.இவரது பாடல்கள் இறைவனிடம் உரிமையுடன் அருளை வேண்டுவனவாகக் காணப்படுகின்றன.இவரது முதல் பாடல் '**பித்தா பிறை சூழ** 'என்று இறைவனை அழைப்பதாக உள்ளது.அகத்துறைகளைக் கொண்டு நாயகன் - நாயகி பாவனையில் பக்தியைப் பரப்புகிறார் சுந்தரர்.

1. பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா
   எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
   வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
   அருட்டுறையுள்
   அத்தாஉனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே.

பித்தனே,பிறையைக் கண்ணியாகச் சூடியவனே,பெருமை உடையவனே.பெண்ணை ஆற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லாரின் கண்ணதாகிய, ' அருட்டுறை ' என்னும் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, முன்பே உனக்கு அடியவனாகி,இப்பொழுது,உனக்கு அடியவன் அல்லேன் என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

2. நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத்துன்னைப்
   பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
   வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
   ஆயாஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

மூங்கில்கள் நிறைந்து வரும் பெண்ணை ஆற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத்

திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, நாய் போலும் கீழ்மையுடையேனாகிய யான் உன்னை எனது இளைய நாள்கள் பலவற்றினும் மனத்தால் நினைத்தல் இன்றிப் பேய் போல அலைந்து இளைத்தேன்.ஆயினும் இதுபோழ்து, பெறுதற்கு அரிய உனது திருவருளை நான் பெற்றேன்.இப்பேற்றை எனக்கு அளிக்க வந்த உனக்கு முன்பே நான் அடியவனாகி,இப்பொழுது ' அடியேன் அல்லேன் ' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

3. மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அன்னேஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

தலைவனே,கரையை மோதி,பொன்னும் மணியும்,வயிரமும் ஆகிய இவற்றைத் தள்ளிக் கொண்டு,ஒளிமிக்கு வருகின்ற பெண்ணை ஆற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள தாய் போன்றவனே,உனக்கு நான் முன்பே அடியவனாகி,இப்பொழுது,' அடியவன் அல்லேன் ' என்று எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!இனிமேல் உன்னை என் மனத்தில் ஒருபோதும் மறவாமலே நினைப்பேன்.

4. முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணைய் நல்லூரருட் டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

இடபத்தை ஊர்பவனே, ஒளி நிறைந்த பெண்ணை யாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணைய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே,உனக்கு நான் முன்பே அடியவனாகி இப்பொழுது,' அடியவன் அல்லேன் ' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ! அப்பொருந்தாமையை அகற்றி என்னை நீ தெளிவித்தருளினமையால்,இனி நான் இறக்கவும்,இவ்வுலகில் வாழப்பெறின் மூப்படைந்து வருந்தவும் ஆற்றேனாகின்றேன்.நெறிகோடினேனாகிப் பொய்ம்மைகள் பலவற்றையே பேசுவேனாகிப் என்னை நீ வெறாது ஏற்றருள்.

5. பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியா
யாதன்பொரு ளானேன்அறி வில்லேன் அருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணைய் நல்லூரருட்டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

அருளாளனே,பூக்களின் மகரந்தம் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லாரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள முதல்வனே! உனக்கு நான் முன்பே அடியவனாகி,இப்பொழுது,' அடியேன் அல்லேன் 'என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ! அப்பொருந்தாச் செய்கையைச் செய்தமையால் அறிவில்லேனாயினேன்,அதனால் ' ஆதன் ' என்னும் சொற்குப் பொருளாயினேன்; ஆயினும் என்னை இகழாது உன் திருவடியை வணங்கி வாழ்கின்ற அறிவர் பெறும் பேற்றை அளித்தருள்.

6. தண்ணார்மதி சூடிதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்

மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அண்ணாஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

தட்பம் நிறைந்த திங்களைச் சூடியவனே,நெருப்புப் போலும் திருமேனியை உடையவனே,உன்னை மதியாதவரது அரண்கள் மூன்றையும் தீ உண்ணும்படி சிரித்தவனே.மூழ்குவோரது பாவத்தைக் கழுவுதல் பொருந்திய பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளி இருக்கும் தலைவனே! உனக்கு நான் முன்பே அடியவனாகி,இப்பொழுது,' அடியேன் அல்லேன் ' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

7. ஊனாய்உயி ரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

பூக்களின் தேன் நிறைந்த பெண்ணை ஆற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் நீங்காது எழுந்தருளி இருப்பவனே,நீ உடலிடத்து நின்று பொருள்களை உணர்ந்து வருகின்ற உயிர்கள் ஆகியும்,அவைகள் நிற்கின்ற அவ்வுடல்களாகியும், வானாகியும்,நிலமாகியும்,கடலாகியும்,மலையாகியும் நிற்கின்றாய்;இப்பெற்றியன் ஆகிய உனக்கு நான் முன்பே அடியவனாகி,இப்பொழுது, 'அடியேன் அல்லேன் ' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

8. ஏற்றார்புரம் மூன்றும் யுண்ணச்சிலை தொட்டாய்

தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர்வான்நீர்
ஏற்றாபெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும்

நன்னெறியானவனே,நீ உனக்கு பகையாய் எதிர்ந்தவர்களது அரண்கள் மூன்றையும் தீ உண்ணும்படி, போர் செய்து அழித்தாய் சிவந்த சடையிடத்து ஆகாய கங்கையைத் தாங்கினாய்,அப்பெருமைகளை அறியாமை காரணமாகத் தோன்றும் சொற்களைச் சொல்லி நான் வீணே உழல்வேனோ! அங்ஙனம் உழலும் நெறியானே,முன்பு உனக்கு அடியவனாயதற்கு மாறாக இப்பொழுது,'அடியேன் அல்லேன் ' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

9. மழுவாள்வலன் ஏந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல்லுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அழகாஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

மழுப்படையை வலப்பக்கத்தில் ஏந்தியவனே, வேதத்தை ஓதுபவனே,உமையை ஒரு பாகத்தில் உடையவனே,செழுமை வாய்ந்து இடையறாது ஒழுகுகின்ற பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் அழகனே,உன்னை வணங்குவாரது துன்பங்களை நீக்குதல் உனது தொழில் என்பதால்,என்னை வலிந்து ஆட்கொள்ள வந்தாய்.அதனை அறியாது,முன்பே உனக்கு அடியவனாகியதனை

மறுத்து,இப்பொழுது,'அடியேன் அல்லேன் ' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

10. காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன் எனலாமே.

மேகத்தினின்றும் ஒழுகும் தன்மையை உடைய நார் திரண்டு பொருந்தி,அலைகளாகிய கைகளால் கரையைக் குத்தி,நிலம் முழுதும் பரவிய புகழைப் பெற்று,ஒளி விளக்குகின்ற பல சிறந்த மணிகளைத் தள்ளி வந்து அழகு மிகுகின்ற பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு,ஆரூரன் ' அடியேன் அல்லேன் ' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ!

**எட்டாம் திருமுறை ( மாணிக்கவாசகர் ) :**

திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை எனப்படுகின்றன.இவற்றைப் பாடியவர் மாணிக்கவாசகர். ' **திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கு உருகாதார்** ' என்னும் பழமொழி திருவாசகத்தின் பெருமையை உணர்த்தும்.வெளிநாட்டுக் கிறித்தவ அறிஞர் ஜி.யு.போப்பின் உள்ளம் கவர்ந்த நூல் இது.இதனை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

திருவாசகத்தில் ஒரு சிற்றிலக்கியம் திருவெம்பாவை ஆகும்.இந்நூல் பக்தியை வளர்க்கும் அழகிய பாடல்களைக் கொண்டது.” **பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக** “ என்று இறைவன் வேண்டியதால் மாணிக்கவாசகர் திருக்கோவையார் பாடினார் என்பர். திருவாசகம் ‘ **தமிழ் வேதம்** ‘ எனவும் அழைக்கப்படுகிறது.மகளிர் விளையாட்டில் காணப்பெறும் நாட்டுப்புற வடிவங்களை மாணிக்கவாசகர் தேர்ந்தெடுத்துப் பாடியுள்ளமை சிறப்பிற்குரியது.

**திருப்பெருந்துறை - சிவபுராணம்**

1. நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
   இமைப்பொழுதும் என் நெஞ்சில்
   நீங்காதான் தாள் வாழ்க
   கோகழி ஆண்ட குருமணி தன்தாள் வாழ்க
   ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
   ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க.

நமச்சிவாய வாழ்க.நாதன் திருவடி வாழ்க.கண்ணிமைக்கும் நேரமும் என் நெஞ்சம் பிரியாதவனுடைய திருவடி வாழ்க.திருவாவடுதுறை ஆண்டருளும் குருவாகிய மாணிக்கத்தின் திருவடி வாழ்க.தானே ஆகமமாகி நின்று நமக்கு அருகில் வருபவனுடைய திருவடி வாழ்க.ஒருவனாகியும் பலவுருக்கொண்டும் இருக்கும் இறைவனிடம் திருவடி வாழ்க.

2. வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன்
   அடி வெல்க
   பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன்

பெய்கழல்கள் வெல்க

புறத்தார்க்குச் சேயோன் தன்

பூங்கழல்கள் வெல்க

கரம் குவிவார் உள்மகிழும் கோன்

கழல்கள் வெல்க

சிரம் குவிவார் ஓங்குவிக்கும்

சீரோன் கழல் வெல்க.

என்னுடைய வேகத்தைப் போக்கி ஆண்டு கொண்ட மன்னனின் திருவடி வெல்லட்டும்.பிறப்பினை நீக்குபவனாகிய தலைக்கோலமுடைய பெருமான் அணிசேர் கழல்கள் வெல்லட்டும்.தன்னை விடுத்து நிற்பவர்களுக்கு வெகுதூரத்தில் உள்ள பெருமானின் பூப்போன்ற மென்மையான கழல்கள் வெல்லட்டும்.கைகளைக் கூப்பி வழிபடுவார் உள்ளத்தில் மகிழ்ந்து இருக்கும் மன்னனுடைய கழல்கள் வெல்லட்டும்.தலை தாழ்ந்து வணங்குவார்களை மிக உயர்ந்த நிலைக்கு ஓங்கச் செய்யும் பெருங்குணம் வாய்த்தவனுடைய கழல்கள் வெல்லட்டும்.

3. ஈசன் அடிபோற்றி எந்தை

அடிபோற்றி

தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிலமன் அடி போற்றி

மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன்

அடிபோற்றி

சீரார் பெருந்துறை நம் தேவன் அடி

போற்றி.

எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டவனின் திருவடி போற்றி, எம் தந்தை என நின்று அருளுபவனின் திருவடி போற்றி,சிவன் எனப்பெறும் செம்பொருளின் சிவந்த திருவடி போற்றி,அன்பினில் நிற்பவனான தூயவனின் திருவடி போற்றி,மாயப் பிறப்பினை நீக்கும் உயர்ந்தோனின் திருவடி போற்றி,அமைப்பு சிறந்து விளக்கும் திருப்பெருந்துறையில் இருக்கும் நம் தேவனின் திருவடி போற்றி.

4. ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
   சிவன்அவன் என் சிந்தையிள்நின்ற அதனால்
   அவன்அருளாலே அவன்தாள் வணங்கிச்
   சிந்தைமகிழச் சிவபுராணம் தன்னை
   முந்தைவினை முழுதும்ஓய உரைப்பன்யான்.

அடங்காத இன்பம் அருளும் கருணையின் மலை போன்றவனுக்கு போற்றுதல்கள் சிவபெருமான் என்னுடைய சிந்தையில் பெருங்கருணையால் வந்திருக்கின்ற காரணத்தால் அவனுடைய திருவருளே துணையாகக் கொண்டு அவனுடைய திருவடியை வணக்கம் செய்து உள்ளம் மகிழும் வண்ணம் சிவபுராணமாகிய இதனை முன் செய்த வினைகள் எல்லாம் தீரச் சொல்லுகின்றேன்.

5. கண் நுதலான் தன் கருணைக்கண்
   காட்ட வந்து எய்தி
   எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
   விணு நிறைந்தும் மண் நிறைந்தும்
   மிக்காய்,விளங்கு ஒளியாய்,

எண் இறந்து எல்லை இலாதானே
நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு
ஒன்று அறியேன்.

நெற்றியிலே ஒரு கண்ணுடைய பெருமான் தன்னுடைய கருணைக்கண் காட்டியதால் இங்கு வந்தேன்.சிந்தனைக்கு எட்டாத பேரழகு மிக்க கழல்பூண்ட திருவடிகளை தொழுது நின்று,வானம்,பூமி மற்றும் இவை தவிர மீதி உள்ளன யாவையுமாய்,ஒளிமிக்கதாயும்,அளவிடும் எல்லைகள் எல்லாம் கடந்து உள்ள பெருமானே! உன் பெரிய தன்மைகளை மோசமான வினைகளில் கிடக்கும் நான் புகழ்ந்து போற்றும் வகை தெரியாது இருக்கிறேன்.

6. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து
இளைத்தேன்,எம்பெருமான்.

புல்லாகவும்,சிறு செடிகளாகவும்,புழுவாகவும்,மரமாகவும்,பலவகை மிருகங்களாகவும்,பறவைகளாகவும்,பாம்பாகவும்,கல்லில் வாழும் உயிராகவும்,மனிதராகவும்,உடல் நீங்கிய பேய்களாகவும்,பலதரப்பட்ட கணக்கூட்டங்களாகவும்,வலிமை மிகுந்த அசுரர்களாகவும்,முனிவராகவும்,தேவராகவும் இந்த அசையும் மற்றும்

அசையாத வற்றால் ஆன ( அண்டம் ) முழுதும் சென்று எல்லாப் பிறப்பும் பிறந்து களைத்து விட்டேன்,எம்பெருமானே!

7. மெய்யே உன் பொன் அடிகள் கண்டு
இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற
நுண்ணியனே.

உன்னுடைய தங்கத் திருவடிகளைக் கண்டு இன்று உண்மையாகவே வீடு பேறடைந்தேன்.நான் உய்யும் பொருட்டு எனது உள்ளத்துள் ஓம் எனும் ஒலியாய் எழுந்த உண்மைப் பொருளே! காளையை ஓட்டி வருபவனே! வேதங்கள் " ஐயா "! எனப் பெரிதும் வியர்ந்து கூறி ஆழமாகவும் பலபல தன்மைகளைப் பெருகி ஆராய்ந்தும் காண முயலுகின்ற மிகச்சிறிய பொருளுமாக இருப்பவனே!

8. வெய்யாய்,தணியாய்,
இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல
வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற
மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்
பெருமானே

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும்
நல்அறிவே.

வெப்பமாகச் சுடுகின்ற வரும், குளுமையாக இருக்கின்ற வரும் நீரே.என் உரிமையாளனாக உள்ள மாசற்றவனே! பொய்மைகள் எல்லாம் அகலும் வண்ணம் வந்து அருள் செய்து,உண்மை அறிவாக ஒளிவிடும் மெய்ச்சுடரே! எந்த அறிவும் இல்லாத எனக்கும் இன்பமாம் பெருமானே! அறிவின்மையைப் போக்கும் நல்லறிவே!

9. ஆக்கம் அளவு இறுதி இல்லாய்,
அனைத்து உலகும்
ஆக்குவாய் காட்டாய் அழிப்பாய்
அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்
நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்,சேயாய்,
நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற
மறையோனே.

தோற்றம்,குறித்த வயது,முடிவு இல்லாதவனே! நீ உலகங்களை எல்லாம் தோற்றுவிக்கின்றாய்,தொடர்ந்து ( அழியாது )இருக்கச் செய்கின்றாய், ( இறுதியில் ) அழிக்கின்றாய்,அருள் தந்து உய்யக் கொள்கின்றாய்,உயிர்களை மாயைக்குள் போக்குவாய்! நீ என்னை உன்னுடைய அடியார் கூட்டத்தில் புகவைப்பாய்.மணத்தினும் ( வாசனை ) நுண்மையான ( சூச்ஹசுமமான )

பொருளே! வெகு தொலைவாகியும்,மிக அருகில் இருப்பவனே! சொல்லிற்கும் சிந்தனைக்கும் எட்டாது நிற்கும் மறை நாயகனே!

10. கறந்த பால் கன்னலொடு
நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள்
தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள்
பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்,
விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய்,எம்பெருமான்...

அப்போது கறந்த பாலொடு கரும்பின் சாறும் நெய்யும் கலந்தால் எவ்வாறு இனிக்குமோ! அவ்வாறு சிறந்து,அடியவர்கள் மனத்தில் தேன் ஊற்றெடுத்தாற் போல நின்று,இப்பிறவியை முற்றுப் பெறச்செய்யும் எங்களுடைய பெருமானே! ஐந்நிறமும் நீயே ஆனாய்! வானவர்கள் போற்றி நிற்க அவர்களுக்கு அரியவனாக மறைந்திருநுதாய்,எம்பெருமானே!

11. வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும்
கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு
அழுக்கு மூடி

மலம் சேரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும்
வஞ்சனையைச் செய்ய,

**பொருள்** ;

கொடிய வினையில் சிக்குண்டிருக்கும் என்னை மறைத்து மூடிய மாயையாகிய இருளினை செய்யத்தகுந்தது,செய்யத் தகாதது என்னும் விதிகளால் கட்டி,மேலே ஒரு தோலும் சுற்றி,கெட்டுப் போவதாகவும்,அழுக்கினை உடையதாகவும் உள்ள திசுக்கள் நிறைந்து,மலத்தினை வெளியேற்றும் ஒன்பது துளைகள் உள்ள,வீடான இவ்வுடலை வைத்துக்கொண்டு மயங்கிநிற்க,ஐந்து புலன்களும் ஏமாற்ற,

12. விலங்கும் மனத்தால்,விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி
நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த
அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே

**பொருள்** :

ஒருமைப்படாமல் சிதறுகின்ற சிந்தனைகளை உடைய மனத்தால் மாசிலாதவனே உன்னிடம் கலந்து நிற்கின்ற அன்பு நிறைந்து,அந்நிறைவால் கசிந்தும்,உள்ளம் உருகி நிற்கின்ற நல்ல தன்மை இல்லாத சிறுமை

உடையவனாகிய எனக்கும் அருள்செய்து,இந்த உலகில் உணரத்தக்க வண்ணம் கருணையால் வந்து,உன்னுடைய நீண்டு அழகிய கழலணிந்த திருவடிகள் காட்டி,கிடந்த அடியேனுக்குப் பெற்ற தாயினும் அதிகமான அன்பு உடையவனான தத்துவப் பொருளே!

13. மாசற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே.

**பொருள்** :

குற்றமற்ற தூய ஒளி மலர்கின்ற மலர் போன்று இனிய சுடரே! ஒளியுருவினனே! தேன் நிறைந்த அமுதமே! சிவபுரத்தை உடையவனே! பாசமாகிய கட்டினை அறுத்துத் திருவருள் புரியும் அறிவிற் சிறந்தோனே! இனிய அறக்கருணை புரிந்து,அதனால் என்னுடைய நெஞ்சில் வஞ்சனை ஒளிய,என் உள்ளம் நீங்காது நின்று பெருங்கருணை பெருக்கெடுக்கும் பெருவெள்ளமே!

14. ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

**பொருள்** :

தெவிட்டாத அமுதமே! அளவுகள் கடந்து நிற்கின்ற பெருமானே! ஆர்வம்\முயற்சி இல்லாதவர் உள்ளத்தில் வெளிப்பாடின்றி மறைந்திருக்கும் ஒளியானே! ( என் உள்ளத்தை ) நீரென உருகச்செய்து,என்னுடைய இன்னுயிராக நிற்பவனே! இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவனே!உள் நிற்பவனே!

15. அன்பருக்கு அன்பனே
யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே
தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு
உணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கு
அரிய நுண் உணர்வே

**பொருள்** :

அன்பினால் தன்னைத் தொழும் அடியார்களுக்கு அன்பே உருவாயவனே! எல்லாமும் தானே ஆகி,எதுவும் தானாக இல்லாது இருக்கின்றவனே! சுடருருக் கொண்டவனே! அடர்ந்த இருளாகவும் இருப்பவனே! பிறப்பு என்பதே இல்லாத பெருமை உடையவனே! முதலாக இருப்பவனே!இறுதியாகவும் இடைப்பட்ட நிலையாகவும் ஆகி இத்தத்துவங்கள் எல்லாம் கடந்தவனே!( காந்தம் போல ) என்னை ஈர்த்து என்னை ஆளாக -

அடியவனாகக் கொண்டு அருளிய என் தந்தைக்கும் தலைவனே! உன்னைத் தமது கூர்மையான மெய்யறிவின் துணையாகக் உணர்கின்ற பெரியோர்களுடைய சிந்தையின் பார்வை வியத்தற்கு உரிய பார்வை! அவர்களுடைய ஆராயும் திறன் வியத்தற்கு உரிய ஆய்வுணர்வே!

16. போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச்
சொல்லாத நுண் உணர்வாய்.

**பொருள்** :

நீங்குவதும்,புதிதாக வருவதும்,கலப்பதும் இல்லாத புண்ணிய மூர்த்தியே!என்னைக் காக்கின்ற காவல் தெய்வமே! காண்பதற்கு அரியதாக ஒளி மிகுந்து இருப்பவனே! தொடர்ச்சியாகவும் முறையாகவும் வருகின்ற இன்ப வெள்ளமே! தந்தையே! மிகுதியாக நின்ற ஒளிவீசும் சுடரான தோற்றத்தின்னாய், சொல்லப்படாத பூடகமான நுண் உணர்வாக இருந்து.

17. மாற்றமாம் வையகத்தின்
வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்
சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்று என்று

**பொருள்** :

இவ்வுலகில் பல்வேறு விதங்களில் கூறப்பட்டு,மெய்யறிவாக ஆகும் தேற்றமே!அந்தத் தேற்றத்தின் பயனான தெளிவே! என்னுடைய சிந்தனையினுள் உண்பதற்கு மிகவும் அரியதும் விரும்பத்தக்கதும்.ஆன அமுத ஊற்றே! என்னை உடைமையாக ஆள்பவனே! பல்வேறு விகாரங்களை உடைய ஊனால் ( சதையால் ) ஆன இவ்வுடம்பின் உள்ளே கட்டுண்டு கிடக்க இயலவில்லை,எம் தலைவா! அரனே! ஓ! என்று பலவாறு.

18. போற்றிப் புகழ்ந்திருந்து
பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்குவந்து வினைப்பிறவி
சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு
அழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்று ஆடும்
நாதனே
தில்லை உள் கூத்தனே
தென்பாண்டி நாட்டானே.

**பொருள்** :

போற்றுதல்கள் செய்து, புகழ் கூறிக் தம்முடைய பொய்கள் ஒழிய உண்மையே ஆன அடியவர்கள் மீண்டும் இவ்வுலகுக்கு வந்து வினை நிறைந்த பிறவியில் சிக்குறாது மாயையால் ஆன இவ்வுடலின் கட்டுமானத்தை அழிக்க வல்லானே! வேறு எதுவுமற்றதாகிய இருளில் கூத்து

ஆடுகின்ற நாதனே! தில்லை என்னும் சிதம்பரத்தில் ஆடுபவனே! தென்பாண்டி நாட்டை உடையனே!

19. அல்லல் பிறவி அறுப்பானே
ஓ என்று
சொல்லற்கு அரியானைச்
சொல்லித் திருவடிக்கீழ்
உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்
சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**பொருள்** :

அல்லல் நிறைந்த பிறவியை நீக்குவானே! ஓ! என்று சொல்லிற்கு அரிய பெருமானை அழைத்து, ( இறைவன் ) திருவடியை பணிந்து அதன் கீழிருந்து சொல்லிய இப்பாடலின் பொருளினை உணர்ந்து சொல்லுபவர்கள் சிவபுரத்தில் இருக்கும் சிவபெருமானின் திருவடி நிழலுக்குச் செல்வார்கள், பலராலும் புகழப்பட்டும், தொழப்பட்டும்.

**திருவாசகம் - திருச்சாழல்** :

திருவாதவூரடிகள் எனும் மாணிக்கவாசக பெருமான் தமிழ்நாட்டில் உள்ள கோவில்கட்குப் புனிதப்பயணம் மேற்கொண்டு அங்குள்ள சிவலாயத்தலங்களில் பதிகங்கள் பாடிக் கொண்டு வரும் நாளில் தில்லை வந்தார்.ஊருக்கு புறத்தே ஓரிடத்தில் தங்கினார்.அவ்வேளையில் ஈழத்து மன்னன் தீட்சிதர்களை வாதுக்கு அழைத்தான்.அது கண்டு பயந்து கலங்கிய

தீட்சிதர்கள் அருள்மிகு நடராஜரை வேண்டி வணங்கினர்.இறைவன் அசரிரி வாக்காக “ வாதவூரரை அடைந்து வெல்லுங்கள் “ என உரைத்தான்.அதன்படி மாணிக்கவாசகர் புத்த மதத்தினரின் ஆங்காரத்தை அடக்க ஈழ மன்னரின் மகளை பேசவைத்தும்,

அவளது பேச்சின் தொகுப்பை மாணிக்கவாசகர் “ திருச்சாழல் “ என்று அருளி செய்தார்.அதுமட்டுமல்ல, மந்திர வலிமையுள்ள அப்புத்தர்கள் அத்தனை பேரையும் ஊமைகளாக்கினார்.” சாழல் “ என்பது மகளிர் விளையாட்டு,சிலப்பதிகாரத்து அடியார்க்கு நற்சாழல் “ நல்லார் தம் தோள் வீச்சு நற்சாழல் “ என்று கூறப்பட்டு உள்ளது.ஆகவே ஒருத்தி பாட்டுடைத் தலைவனை புகழ்ந்து அழகையும் அணியையும் பற்றி வினவ,மற்றொருத்தி,தோள்வீசி நின்று பாட்டாலே விடை அளிப்பது தான் இந்த சாழல் விளையாட்டு.

இந்தப் பதிகப்பாடல்களை அறிந்து தெளிந்து ஓதினால் வழக்கறிஞர்கள்,வழக்காடும் வாதத்திறமையும்,மாணவ மாணவியர்கள் திக்குவாயர்கள்,ஊமை நன்கு பேசும் ஆற்றல் பெறுவார்கள் என்பது தின்னம் இப்பதிக பாடல்களைக் காண்போம்.

1. பூசுவதும் வெண்ணீறு
   பூண்பதுவும் பொங்கரவம்
   பேசுவதும் திருவாயால்
   மறைபோலுங் காணேடீ
   பூசுவதும் பேசுவதும்
   பூண்பதுவுங் கொண்டென்னை

ஈசனவன் எவ்வுயிர்க்கும்

இயல்பானான் சாழலோ.

பூசுவது வெண்ணீறு,அணிவது பாம்பு,பேசுவது வேதம்,உங்கள் தெய்வத்தின் தன்மையிருந்தபடி என்னேடி? என்று வினவ,பூசுவது,பூண்பது,பேசுவது என்னும் இவற்றைக் கொண்டு உனக்காகுங் காரியம் ஒன்றுமில்லை;அந்த பரமசிவன் எல்லா உயிர்களுக்கும் தக்கபயன் அளிப்பவனாய் இருக்கிறான் என்று ஊமைப் பெண் விடை கூறினாள்.

2. என்னப்பன் எம்பிரான்

எல்லார்க்குந் தான்ஈசன்

துன்னம்பெய் கோவனமாக்

கொள்ளுமது என்னேடீ

மன்னுகலை துன்னுபொருள்

மறைநான்கே வான்சரடாத்

தன்னையே கோவனமாச்

சாத்தினன்காண் சாழலோ.

என் அப்பன்,எம்பிரான்,எல்லார்க்கும் தலைவன்,அப்படிப் பட்டவன் தைத்த துணியைக் கோவனமாகக் கொண்டதற்குக் காரணம் யாது?என்று புத்தன் வினவ,கலைகளையும் வேதங்களையும் சரடாகக் கொண்டமைந்த பொருளாகிய கோவணத்தைச் சாத்திக் கொண்டான் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

3. கோயில் சுடுகாடு

கொல்புலித்தோல் நல்லாடை

தாயுமிலி தந்தையிலி

தான்தனியன் காணேடீ

தாயுமிலி தந்தையிலி

தான்தனியன் ஆயிடினுங்

காயில் உலகனைத்துங்

கற்பொடிகாண் சாழலோ.

சுடுகாட்டைக் கோயிலாகவும்,புலித்தோலை ஆடையாகவும் கொண்டான்.அன்றியும் அவனுக்குத் தாய் தந்தை யாரும் இல்லை;இத்தன்மையனோ உங்கள் கடவுள்? என்று புத்தன் வினவ, எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தையர் இல்லாவிடினும், அவன் சினந்தால் உலகம் முழுவதும் கற்பொடியாய் விடும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

4. அயனை அநங்கனை

அந்தகனைச் சந்திரனை

வயனங்கண் மாயா

வடுச்செய்தான் காணேடீ

நயனங்கள் மூன்றுடைய

நாயகனே தண்டித்தால்

சயமன்றோ வானவர்க்குத்

தாழ்குழலாய் சாழலோ.

பிரமனையும்,மன்மதனையும்,யமனையும்,சந்திரனையும் வடுப்படுத்தினன்; இதுதானோ உங்கள்

கடவுளின் தன்மை? என்று புத்தன் வினாவ,முக்கண்ணாகிய எமது கடவுளே தண்டித்தால்,தேவர்களுக்கு அதுவும் வெற்றியன்றோ என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

5. தக்கனையும் எச்சனையுந்
தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்தருளி
அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற்
றருளினன்காண் சாழலோ.

தக்கனையும்,யாகத்து அதிதேவரையும் தலை அரிந்து,கூடி வந்த தேவர்களையும் அழித்தது என்ன காரியம்? என்று புத்தன் வினாவ,தேவர்களை அழித்தாலும் மறுபடியும் அவர்களை உயிர் பெறச் செய்து,யாகத்தினை நடத்தியவனாகிய தக்கனுக்கு ஆட்டின் தலையை அருள் செய்தான் என்று ஊமைப் பெண் விடை கூறினாள்.

6. அலரவனும் மாலவனும்
அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற
நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற

நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந்
தவிரார்காண் சாழலோ.

பிரம விட்டுணுக்கள் அறிய வொண்ணாமல் நெருப்புருவாய் நின்றது யாதுக்கு? என்று புத்தன் வினாவ,அப்படி எம்மிறைவன் நில்லாவிடின்,அவ்விருவரும் தமது ஆங்காரத்தை விடார் என்று ஊமைப்பெண் விடை சொன்னாள்.

7. மலைமகளை யொருபாகம்
வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற்
பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற்
பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து
பெருங்கேடாஞ் சாழலோ.

பார்வதியை ஒரு பாகத்தில் அமைத்துக் கொள்ளுதலும்,மற்றொருத்தியாகிய கங்கை நீருருவாகி அவன் சடையில் பாய்வதற்குக் காரணம் யாதென்று? புத்தன் வினாவ,நீருருவாகி அவ்விறைவனது சடையில் பாயாவிடின்,பூமி முழுதும் பாதாளத்தில் வீழ்ந்து பெருங்கேடு அடையும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

8. கோலால மாகிக்
குரைகடல்வாய் அன்றெழுந்த

ஆலாலம் உண்டான்

அவன்சதுர்தான் என்னேடீ

ஆலாலம் உண்டிலனேல்

அன்றயன்மால் உள்ளிட்ட

மேலாய தேவரெல்லாம்

வீடுவர்காண் சாழலோ.

அக்காலத்தில் பாற்கடலில் உண்டாகிய நஞ்சை யுண்டான்;அதற்குக் காரணம் யாதென்று?புத்தன் வினாவ,அந்த நஞ்சை எம்மிறைவன் உண்டிலனாயின் பிரம விட்டுணுக்கள் முதலான தேவர்கள் எல்லாரும் அன்றே மடிந்து ஒழிவார்கள் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

9. தென்பா லுகந்தாடுந்

தில்லைச்சிற் றம்பலவன்

பெண்பா லுகந்தான்

பெரும்பித்தன் காணேடீ

பெண்பா லுகந்திலனேற்

பேதாய் இருநிலத்தோர்

விண்பா லியோகெய்தி

வீடுவர்காண் சாழலோ.

தென்திசை நோக்கி நடிக்கின்ற தில்லைச் சிற்றம் பலத்தான் பெண் பாகத்தை விரும்பினான்,இவன் பெரும் பித்தனோ? என்று புத்தன் வினாவ,எம்மிறைவன் பெண்பாகத்தை விரும்பிலனாயின், நிலவுலகத்தோர் யாவரும் யோகத்தை

அடைந்து மேலுலகத்தைச் சேர்வார்கள் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

10. தானந்தம் இல்லான்
தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்
தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்
தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர்
வான்பொருள்காண் சாழலோ.

தான் முடிவு இல்லாதவனாயிருந்தும் தன்னை அடைந்த என்னை ஆனந்த சாகரத்தில் அழுந்தச் செய்தான்,இது என்ன புதுமை? என்று புத்தன் வினாவ,ஆனந்த சாகரத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கு மேன்மையான பொருளாகும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

11. நங்காய் இதென்னதவம்
நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே
காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள்
காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத்
தரித்தனன்காண் சாழலோ.

நரம்போடு கூடிய எலும்புக் கூட்டினை அணிந்து முழுவெலும்பைத் தோளில் சுமந்தான்.இது என்ன தவமோ? என்று புத்தன் வினாவ,முழுவெலும்பு வந்த விதத்தைக் கேள்.கால வேற்றுமையால் பிரம விட்டுணுக்கள் இறக்க,அவர்கள் எலும்புக் கூட்டினை தரித்தான் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

12. கானார் புலித்தோல்
 உடைதலைஉளன் காடுபதி
 ஆனால் அவனுக்கிங்
 காட்படுவார் ஆரேடீ
 ஆனாலுங் கேளாய்
 அயனுந் திருமாலும்
 வானாடர் கோவும்
 வழியடியார் சாழலோ.

புலித்தோலே ஆடையும்,தலைஓடே உண்கலமும்,மயானமே இடமும் ஆனால்,அவனுக்கு அடிமைப் படுவோர் யாவர்? என்று புத்தன் வினாவ,புலித்தோல் முதலியவற்றை உடையவனாயினும் பிரமன்,திருமால்,இந்திரன் என்பவர் அவனுக்கு வழித் தொண்டர் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

13. மலையரையன் பொற்பாவை
 வாள்நுதலாள் பெண்திருவை
 உலகறியத் தீவேட்டான்
 என்னுமது என்னேடீ
 உலகறியத் தீவேளா

தொழிந்தன்னேல்

உலகனைத்துங்

கலைநவின்ற

பொருள்களெல்லாங்

கலந்கிடுங்காண் சாழலோ.

மலையரையன் மகளாகிய உமாதேவியை,உலகம் அறியத் தீ முன்னே மணம் செய்தனன் என்பது என்ன காரியம்? என்று புத்தன் வினாவ,இறைவன் உலகமறிய மணம் செய்து கொள்ளாது ஒழிந்தால் உலகம் முழுதும் சாத்திரப் பொருள்களும் நிலைமாறிவிடும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

14. தேன்புக்க தண்பணைசூழ்

தில்லைச்சிற் றம்பலவன்

தான்புக்கு நட்டம்

பயிலுமது என்னேடீ

தான்புக்கு நட்டம்

பயின்றிலனேல் தரணியெல்லாம்

ஊன்புக்க வேற்காளிக்

கூட்டாங்காண் சாழலோ.

தில்லைச் சிற்றம்பலத்தான் நடனம் செய்தற்குக் காரணம் யாது? என்று புத்தன் வினாவ,இறைவன் நடனம் செய்யாது ஒழிந்தால்,உலகம் முழுதும் காளிக்கு உணவாய் விடும் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

15. கடகரியும் பரிமாவும்

தேரும்உகந் தேறாதே

இடபம்உகந் தேறியவா

றெனக்கறிய இயம்பேடீ

தடமதில்கள் அவைமூன்றுந்

தழலெரித்த அந்நாளில்

இடபமதாய்த் தாங்கினான்

திருமால்காண் சாழலோ.

மதயானை,குதிரை,தேர் இவற்றின் மீது ஏறாமல் இடபத்தின் மீது சிவபெருமான் ஏறினதற்குக் காரணம் யாது ?என்று புத்தன் வினாவ,முப்புரங்களை எரித்த காலத்தில் தேரின் அச்சு முறியத் திருமால் இடப உருவாய்த் தாங்கினான் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

16. நன்றாக நால்வர்க்கு

நான்மறையின் உட்பொருளை

அன்றாலின் கீழிருந்தங்

கறமுரைத்தான் காணேடீ

அன்றாலின் கீழிருந்தங்

கறமுரைத்தான் ஆயிடினும்

கொன்றான்காண் புரமூன்றுங்

கூட்டோடே சாழலோ.

சனகர் முதலிய நால்வருக்கும் நான்கு வேதங்களின் உட்பொருள்களை ஆலமர நிழலிருந்து சொன்னான்,அது என்ன? என்று புத்தன் வினாவ,அன்று ஆலமர நிழலிருந்து அறங்கூறினானாயினும் முப்புரங்களை வேரோடு அழித்தான் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

17. அம்பலத்தே கூத்தாடி

அமுது செயப் பலிதிரியும்

நம்பனையுந் தேவனென்று

நண்ணுமது என்னேடீ

நம்பனையும் ஆமாகேள்

நான்மறைகள் தாமறியா

எம்பெருமான் ஈசாவென்

றேத்தினகாண் சாழலோ.

அம்பலத்தில் கூத்தாடி,பிச்சை எடுத்துண்டு உழல்கின்ற சிவனையும் தேவனென்று அடைவது என்ன அறியாமை? என்று புத்தன் வினாவ,அவனை நான்மறைகள் அறியாதவைகளாய் எம்பெருமானே! ஈசனே! என்று துதித்தன என்று அவள் கூறினாள்.

18. சலமுடைய சலந்தரன்றன்

உடல்தடிந்த நல்லாழி

நலமுடைய நாரணற்கன்

றருளியவா றென்னேடீ

நலமுடைய நாரணன்க்கீழ்

அலராக இட ஆழி

அருளினன்காண் சாழலோ.

சலந்தரன் உடம்பைச் சேதித்த சக்கரத்தைத் திருமாலுக்குக் கொடுத்தற்குக் காரணம் யாது? என்று புத்தன் வினாவ,திருமால் தன் கண்ணைப் பறித்து

மலராகத் திருவடியில் சாத்தினதால் கொடுத்தான் என்று ஊமைப் பெண் விடை சொன்னாள்.

**பயிற்சி வினாக்கள்**:

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்:**

1. சுந்தரரின் பெற்றோர் யாவர்?
2. சுந்தரரின் வேறுபெயர்கள் யாவை?
3. இறைவனையே மனைவியிடம் தூது அனுப்பியவர் யார்?
4. சுந்தரரை இறைவன் தடுட்தாட் கொண்ட இடம் எது?
5. சுந்தரர் யாரை என்ன கூறி வெஞ்சினார்?
6. இறைவனுக்குத் தோழன் ஆனவர் யார்?
7. கொடியேன் என தன்னை கூறிக் கொள்பவர் யார்? ஏன்?
8. மாணிக்கவாசகர் எழுதிய நூல்கள் யாவை?
9. ஏழாம் திருமுறையை தொகுத்தவர் யார்?
10. எட்டாம் திருமுறையை தொகுத்தவர் யார்?
11. மாணிக்கவாசகரின் வேறுபெயர்கள் யாவை?
12. ‘பித்தா பிறைசூடி’ என்ற பாடலை பாடியவர் யார்?
13. ‘அழுது அடியடைந்த அன்பர்’ என்று அழைக்கப்படுபவர் யார்?
14. ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல் எவை?

15. பதிகம் என்றால் என்ன?

16. ஒன்பது துளைகளையும்,ஐந்து புலன்களையும் அடக்கி ஆள்பவர் என்று கூறியவர் யார்?

17. "நோக்கரிய நோக்கே நுணக்கு அரிய நுண் உணர்வே" - விளக்கம் தருக.

18. சாழல் வரையறு.

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்:**

1. நாய்போலும் கீழேன் என சுந்தரர் தன்னை கூறிக் கொள்வது எதற்காக?
2. ஊன்,உயிர்,உடல்,உலகம் என்று சுந்தரர் கூறும் செய்திகள் எவை?
3. எத்தனை பிறவிகள் எடுத்ததாக மாணிக்கவாசகர் கூறுகிறார்?
4. "அல்லல் பிறவி அறுப்பவன்" என்று மாணிக்கவாசகர் எங்ஙனம் கூறுகிறார்?
5. சிவபெருமானின் தோற்றம் குறித்து எழுதுக.
6. பன்னிரு திருமுறைகள் பற்றி குறிப்பு வரைக.

**பத்து மதிப்பெண் வினாக்கள்:**

1. திருப்பெருந்துறையில் சிவனை யாது வேண்டி உய்விக்க வைக்க வழி கூறுகிறார்?
2. சுந்தரர் சிவனை பித்தன் என கடிந்து பாடிய நும் பாடல்பொருளின் கருத்துக்களை தொகுத்துரைக்க.
3. திருவாசகம் பற்றி நீவிர் அறிந்தவற்றை கூறுக.

**மேலும் தகவலுக்கு,**

1. திருநாவுக்கரசு நாயனார் அருளி செய்த தேவார திருப்பதிகங்கள் ஆறாம் திருமுறை ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிகர் ஞானசம்பந்தர் பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவருள் ஆணையால் வெளியிடப்பட்டது தன்மையா தீனம் - 1963.

2. https://www.gunathamizh.com/2020/05/blog-post_30.html